குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No.36/2023**

வழக்கு சாட்சி எ.ம.சா.2

2026ம் பிப்ரவரி மாதம் 18–ம் நாள் அரசுதரப்பு சாட்சியாகிய 2வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.S.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோடீஷ்வரி | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

நாள்: 18.02.2026

**குறுக்கு விசாரணை**

தர்மராஜ் எந்த ஆண்டில் எங்களுக்கு பைனான்ஷ் செய்தார் என்றால் 2017 ல் எனக்கு பைனான்ஷ் செய்யவில்லை. மகளிர் குழுவிற்கு தான் செய்தார். பொதுவாக யார் கடன் வாங்கி உள்ளார்களோ அவர்கள் தான் பாதுகாப்பு ஆவணங்களை கொடுப்பார்கள் என்றால் சரிதான். சுயஉதவி குழுவில் யார் யார் கடன் வாங்கியுள்ளார்களோ அவர்கள் தனித்தனியாக தர்மராஜ்டம் பாதுகாப்பு ஆவணம் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் தர்மராஜ்டம் எந்த பணமும் பெறவில்லை என்றால் சரிதான். தர்மராஜ்டம் எந்த தேதியில் எங்கு வைத்து காசோலை கொடுத்தேன் என்றால் எனது அலுவலகத்தில் மே அல்லது ஜுன் 2017 ஆக இருக்கும். கடன் விண்ணப்பம் என்பது யார் பைனான்ஷ் செய்கிறார்களோ அவர்களிடம் தான் இருக்கும் என்றால் சரிதான். அந்த விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்த பின்னிட்டு தான் பணத்தை கொடுப்பார்கள் என்றால் சரிதான். சுயஉதவி குழுவினர் கடன் கேட்டால் விண்ணப்பத்தை நான் பூர்த்தி செய்து தர்மராஜ்டம் கொடுத்துவிடுவேன் என்றால் சரிதான். அன்றைய தினம் 4, 5 நபர்கள் கடன் வாங்க வரவில்லை. அதனால் பூர்த்தி செய்து கையெழுத்து வாங்கி வைக்க சொல்லி என்னிடம் கொடுத்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் எ.மா.சா.ஆ.2 ஆவணத்தில் பதிவு எண் இல்லை என்றால் சரிதான். RD Finance ல் தொலைபேசி எண் இல்லை என்றால் சரிதான். முகவரி மட்டும் தான் இருந்தது. விண்ணப்பத்தில் Serial எண் இல்லை என்றால் சரிதான். RD finance ன் முத்திரை இல்லை என்றால் சரிதான். எ.மா.சா.ஆ.2 அச்சகத்தில் கொடுத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. RD Finance

நிறுவனத்திற்கும் மனுதாரருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கடன் வழக்கு முடித்த பிறகு எங்கு வைத்து தர்மராஜ்டம் ஆவணங்களை கேட்டேன் என்றால் தொலைபேசியில் தொடர்ப்பு கொண்டு ஆவணங்களை கேட்டேன். காசோலையை கொடுக்க மறுத்ததிற்கு நான் காவல் நிலையத்தில் புகாரோ அல்லது அறிவிப்போ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தர்மராஜ் காசோலையை கொடுக்க மறுக்கவில்லை என்றும் கைதவறுதலாக வைத்து விட்டதாக சொல்லி தேடி எடுத்து தருவதாக சொன்னதால் அவர் மீது உள்ள நம்பிக்கையால் நான் புகார் அளிக்கவில்லை. எங்களுடைய பாதுகாப்பிற்காக வசூலை நிறுத்தி வைக்க மட்டும் கடிதம் அனுப்பினோம். என் கணவர் காசோலை தொலைந்துவிட்டதாக தான் வசூல் நிறுத்தி வைக்க சொல்லியிருந்தார் என்றால் சரிதான். குற்றமுறையீட்டாளரிடமிருந்து காசோலை அவமதிப்பு குறித்து வழக்கறிஞர் அறிவிப்பு பெறப்பட்டது பின்பு கூட தர்மராஜ் மீது எவ்வித குற்றவியல் நடவடிக்கையும் நாங்கள் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் அறிவிப்பு கிடைத்த பின்னர் தான் தர்மராஜ்டம் இருந்து வாதிக்கு காசோலை கொடுக்கப்பட்ட விவரம் தெரியவந்தது. காவல் துறையில் புகார் அளித்தாலும் பலன் இல்லை என தெரிந்து ஆவணங்களை வைத்து நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளலாம் என இருந்துவிட்டேன். அரச்சலூர் காவல் நிலையத்தில் என் கணவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த புகாரில் சக்திவேல் மனைவி ராதிகா எனக்கும் என் கணவருக்கும் ரூ.18,50,000/- பணத்தை மோசடி செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் எத்தனை நபர்களை விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். சக்திவேல் மனைவி ராதிகாவை எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் ராதிகாவை குறுக்கு விசாரணையில் "நான் எனது புகாரில் எதிரி என்னிடம் வாங்கிய பணத்திற்கு ஆதரவாகத்தான் காசோலை கொடுத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை" என்று சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். அதேபோல் குறுக்கு விசாரணையில் " எதிரியின் மாமனார் கோவை பிரகாஷின் இருதய அறுவை சிகிச்சைக்காகத்தான் காசோலை கொடுத்து ரூ.10,00,000/- என் கணவரிடம் எதிரி வாங்கியுள்ளார்' என்று சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். ஆனால் அது பொய். அதேபோல் குறுக்கு விசாரணையில் " மகளிர் சுயஉதவி குழு சம்மந்தமாக காசோலை தரவில்லை" என்று சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். ஆனால் அது பொய். எனது வழக்கில் உங்கள் வழக்கில் ரூ.10,00,000/- எதிரியின் மாமனாரின் இருதய அறுவை சிகிச்சைக்காகத்தான் கொடுக்கவில்லை. நாங்கள் Claim செய்துவிட்டோம் என்று எந்த கேள்வியும் கேட்கவில்லை என்றால் சரிதான். குற்றமுறையீட்டாளர் மனைவி ராதிகாவிற்கு சுயஉதவி குழுக்காக தரவேண்டிய

பணம் ரூ.8,50,000/- என்றும், குற்றமுறையீட்டாளரிடம் தனிப்பட்ட முறையில் வாங்கிய பணம் ரூ.10,00,000/- என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் குற்றமுறையீட்டாளரிடம் தனிப்பட்ட முறையில் பணம் வாங்கியுள்ளார் என்றால் சட்டப்படி கொடுக்கவேண்டிய பணம் என்று சொன்னால் சரியல்ல. என் கணவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் நாங்கள் தயார் செய்தது என்று சொன்னால் சரியல்ல.
**விசாரணை முடிக்கப்பட்டது.**